## குடியரசுத் தலைவருடைய கண்ணியம் பாதிக்கப்படும்போது

# எதிர்க்கட்சிகள் கேட்பதற்கான உரிமை இருக்கிறது!

### ‘நியூஸ் 7’ தொலைக்காட்சி ‘கேள்வி நேரம்’ நிகழ்ச்சியில் ‘புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறப்பது’ குறித்த விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் வாதம்!

**சென்னை, மே 28–**

**‘நியூஸ் 7’ தொலைக்காட்சியில் ‘கேள்வி நேரம்’ நிகழ்ச்சியில் ‘புதிய நாடாளுமன்றம் கட்டிடம் திறப்பது’ குறித்த விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் விவாதத்தின் போது புதிய நாடாளுமன்றத்தை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களை அழைத்து திறப்பதுதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சரியான வழிமுறையாகும் என்றும், குடியரசுத்தலைவருடைய கண்ணியம் பாதிக்கப்படும் போது, எதிர்க்கட்சிகள் கேட்பதற்கான உரிமை இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.**

‘நியூஸ் 7’ தொலைக்காட்சியில் “நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழா புறக்கணிப்பு; எதிர்க்கட்சிகளின் முடிவு ஏற்புடையதா?” என்ற தலைப்பில் நடைபெற்ற ‘கேள்வி நேரம்’ விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் தொடக்க விவாதம் வருமாறு:-

நாடாளுமன்றம் புதிய கட்டிடம் திறப்பது என்பது ஒரு நல்ல விஷயம் தான். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. இது காங்கிரஸ் ஆட்சி காலத்தில்; பா.ஜ.க. பாஷையில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இதற்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது என்று சொல்லலாம்.

இப்போது இதனை கட்டி முடிச்சு இருக்காங்க. இது நல்ல விஷயம் தான். இதற்கு மரபு என்று எதுவும் இல்லை. இதுக்கு முன்னால எந்த பாராளுமன்றமும் கட்டல. அனெக்ஸ் நூலகம் என்று பிற கட்டிடங்கள் கட்டி இருந்தாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உட்காரும் இடம்தான்; அந்த சேம்பர் தான்; பாராளுமன்றமாக கருதப்படும். அதற்குத்தான் டாக்டர் அம்பேத்கர் சொன்ன மாதிரி உணர்வுள்ள ஜனநாயகத்தை பிரதிபலிக்கக்கூடிய ஒரு விஷயமாக இதனை நாம் பார்க்கிறோம்.

புதிய பாராளுமன்றத்தை, ஒரு பெரும்பான்மை பெற்ற கட்சியின் அங்கமாக இருக்கும் பிரதமர் இதனைத் திறக்கிறார். ஆனால் முப்படைகளின் தலைவராக குடியரசுத்




தலைவராக இருக்கிறார். முதல் குடிமகனாக இருக்கிறார். அரசியல் சட்ட அடிப்படையில், இந்தியாவிற்கே தலைமை தாங்குகின்றவராக இருக்கிறார். அவரை நியமித்ததில் பெருமைபட்டுக் கொள்ளும் பா.ஜ.க.... இவரை வைத்து திறப்பது தானே முறை.

‘நாங்கள் ஒரு மலைசாதி பெண்மணியை ஜனாதிபதியாக நியமித்து இருக்கோம்’ அப்படி என்று பெருமைப்பட்டுக் கொள்கிறது பா.ஜ.க.. அந்தப் பெருமை பட்டுக்கொள்கின்ற, அதே நேரத்தில், அதே மலைசாதி பெண்மணியை வைத்து நாடாளுமன்றத்தை திறந்து இருந்தால், பிரதமர் மோடியின் பெருமை இன்னும் கொஞ்சம் உயர்ந்து இருக்கும்.

**நெறியாளர்:** பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்த மோடி அவர்கள் திறப்பதினால் என்ன பிரச்சினை?

**மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்:** குடியரசுத் தலைவர் அரசியல் சட்டப்படி முதன்மை பெண்மணியாக இருக்கிறார். இரு சபைகளுக்கும் அதிபராகவும் இருக்காங்க அவங்க. அப்படி இருக்கும் போது அவர்களை வைத்து திறப்பது தான் பாராளுமன்ற ஜனநாயகத்தில் ஒரு சரியான வழிமுறையாக இருக்கும்.

நீங்கள் திருப்பி திருப்பி கேள்வி கேட்கிறீர்கள். குடியரசுத் தலைவர் அவர்கள் ஆளுநர் மாதிரி நியமிக்கப்படுபவர் அல்ல. அவர் மக்கள் பிரதிநிதியாக இன்டைரக்டாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், ராஜ்யசபா எம்.பி.க்கள் என்று குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதனால் குடியரசுத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றே சொல்லலாம். ஆனால் கவர்னர் நியமிக்கப்படுபவர். கவர்னருக்கு ஒரு அதிகாரமும் கிடையாது என்று அம்பேத்கர் பல தடவை சொல்லியிருக்கிறார். உச்சநீதிமன்றமும் இப்போது பல தடவை சொல்லி இருக்கின்றது.

**நெறியாளர்:** சட்டமன்றத்தை கூட்டவும், நிறுத்தி வைக்கவும் அதிகாரம் பெற்றவர் ஆளுநர்.

**மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்:** அது அவருடைய டுட்டி, அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரம் கிடையாது. அது ஒரு டுட்டி. அதற்காகத்தான் டாக்டர் அம்பேத்கர் கூறினார், 107 குறித்து டிஸ்கஸ் செய்யும்போது, அரசியல் சட்டம் கவர்னருக்கென்று எந்த அதிகாரத்தையும் கொடுக்கவில்லை. ஆனால் ஒரு புதிய அரசை அமைப்பது, அதற்காக முதல்வரை கூப்பிட வேண்டும். யாருக்கு மெஜாரிட்டி போன்று அவருக்கு ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கு.

முக்கியமாக குடியரசுத் தலைவரையும், கவர்னரையும் ஒப்பிடாதீங்க. மாநிலங்களில் முதல்வர்கள் திறக்கிறார்கள் என்றால், கவர்னரை கூப்பிட்டால் நல்லது, அன்டர் ஸ்டான்டிங் இருந்தா கூப்பிடுவார்கள். தமிழிசை மாதிரி தகராறு செய்தால் கூப்பிட மாட்டார்கள். அதனால் அதனை குறைசொல்ல முடியாது.

ஆனால் குடியரசுத் தலைவர் அப்படி கிடையாது. அவர் மக்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரை நீங்கள் கூப்பிடாமல் திறக்கிறீர்கள். ஒரு மலைசாதிப் பெண்ணை குடியரசுத் தலைவராக நியமித்தோம் என்று பெருமைப்படுகிறீர்கள். அந்த அம்மா ரிப்பன் கட் செய்து, புதிய பில்டிங்கினுள் செல்வதில் உங்களுக்கு என்ன பிரச்சினை?

ராம்நாத் கோவிந்த், மார்ச் 2018- காலத்தில் பூரி ஜெகநாத் கோவிலுக்குள் செல்ல முடியவில்லை. அவருக்கு என்ன பிரச்சினை? அதே பிரச்சினை இவருக்கும் உண்டா? யாருக்கு திரவுபதி முர்முக்கும் உண்டா? நான்கு வர்ணங்கள் இருந்தால் சமூகத்தில் அமைதி நிலவும் என்று கோல் வார்க்கர் சொன்னாரே. அதனை நீங்கள் காப்பாற்றி வருகிறீர்களா?

**நெறியாளர்:** இந்தப் பிரச்சினையைநீங்கள்தீண்டாமையில் கொண்டு வருகிறீர்களா.

**மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்:** நான் அந்த வார்த்தையை பயன்படுத்த விரும்பவில்லை. நான் முதலில் என்ன கூறினேன். குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களை வைத்துத் திறந்து இருந்தால் மோடி அவர்களின் பெருமை, இன்னும் பல மடங்கு உயரும்- உயர்ந்திருக்கும்.

இவ்வளவு தூரம் கட்டி நீங்கள் திறப்பதில், இன்றைக்கு அவர்களை கூப்பிடாததினால், அது மட்டுமல்ல அழைப்பிதழில் அவர்கள் பெயர் இல்லாமல் ஒரு பாராளுமன்றத்தின், ஜனநாயகத்தின் கோவிலை நீங்கள் திறப்பது என்பது நிச்சயமாக அது விமர்சனத்திற்குட்பட்டது.

எதிர்க்கட்சிகள் வந்து முர்முவை ஆதரிக்கவில்லை. அதனால் நீங்கள் கேட்கக்கூடாது என்று கூறுவது சரியில்லை. ஏன் என்றால் எங்களுக்கும் சேர்த்து தான் அவர் குடியரசுத் தலைவராக இருக்கிறார். அப்போது, அவர்களுக்கு ஒரு பிரச்சினை வரும்போது, அவர்களுடைய கௌரவம் குறைக்கப்படும் போது, அவர்களுடைய கண்ணியம் பாதிக்கப்படும்போது எதிர்க்கட்சிகள் கேட்பதற்கான உரிமை இருக்கின்றது.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் விவாதத்தில் பேசினார்.

---

## எவரெஸ்ட் உச்சியைத் தொட்டுத் திரும்பிய

# முத்தமிழ்ச் செல்விக்கு முதல்வர் வாழ்த்து!

**சென்னை, மே 28 –**

**சென்னையைச் சேர்ந்த என். முத்தமிழ்ச்செல்வி எவரெஸ்ட் உச்சியைத் தொட்டு திரும்பியுள்ளார். இச்செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

சென்னையைச் சார்ந்த திருமதி என். முத்தமிழ்ச் செல்வி அவர்கள் 2023ஆம் ஆண்டு “ஏசியன் டிரக்கிங் இன்டர்நேஷனல் நிறுவனம் “ மூலம் நேபாளம் தலைநகர் காட்மாண்டுவில் இருந்து புறப்பட்ட குழுவினருடன் இணைந்து உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் 8,848 மீட்டர் ஏறி சாதனை செய்ய திட்டமிட்டு 02.04.2023 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு நேபாளம் சென்றார். நேபாள அரசின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த எவரெஸ்ட் சிகரம் ஏறுதலில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து ஏராளமானோர் பங்கேற்றனர். முத்தமிழ்ச் செல்வி அவர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை செய்ய தமிழ்நாட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் பெண்.

இவர் 2023 ஏப்ரல் 2 ந்தேதி சென்னையிலிருந்து காட்மாண்டு சென்றார். ஏப்ரல் 5ந்தேதி கேம்பிற்கு (started to Base camp) பயணத்தை தொடங்கினார். ஏப்ரல் 19 ந்தேதி லோபுச் பகுதி உயரத்தை (20075 அடி - 6119 மீட்டர் உயரம்) (LOBUCHE PEAK SUMMIT 20075 feet - 6119 meter) அடைந்தார். மே 18 -ந் தேதி மவுண்ட் எவரெஸ்டுக்கு பயணத்தை தொடங்கினார். மே23ந்தேதி மவுண்ட் எவரெஸ்ட் பகுதியை வெற்றிகரமாக அடைந்தார்.(MOUNT EVEREST SUMMIT 29035 FEET8848.86 METER completed successfully). மே 24ந் தேதி கேம்ப் 2 க்கு வந்து சேர்ந்தார்.

இச்செய்தியறிந்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் “எவரெஸ்ட் உச்சியைத் தொட்டுத் திரும்பியுள்ள சாதனைப் பெண்மணி முத்தமிழ்ச் செல்வி அவர்களுக்கு வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டுள்ளார்.



தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் எம்.பி. நிதியிலிருந்து ரூ.10,28,000 மதிப்பீட்டில் தஞ்சை மாவட்டத்திற்குட்பட்ட 12 மாற்றுத் திறனாளிகளுக்கு கூடுதல் சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனத்தை மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. முன்னிலையில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, பாபநாசம் வடக்கு ஒன்றியச் செயலாளர் என்.நாசர், பேரூர் செயலாளர் ச.கபிலன், மாநில அயலக அணி துணைச் செயலாளர் டி.ஆர்.கே.விஜயன், ஒன்றிய பெருந்தலைவர்கள் சுமதி கண்ணதாசன் (பாபநாசம்), கே.வி.கலைச்செல்வன், பாபநாசம் பேரூராட்சித் தலைவர் பூங்குழலி கபிலன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

---

## திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கி



# நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக இளைஞர் அணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்!

### நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் அறிவிப்பு!

**நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக இளைஞர் அணி சார்பில் மாநில இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களை மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவித்துள்ளார்.**

| தேதி & நேரம் | தலைமை கழக பேச்சாளர்கள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 28.05.2023 - 4 மணி | ஆடுதுறை உத்திராபதி | மோகனூர் மேற்கு ஒன்றியம் | மணப்பள்ளி |
| 28.05.2023 - 5 மணி | ஆடுதுறை உத்திராபதி | மோகனூர் மேற்கு ஒன்றியம் | வாழவந்தி |
| 28.05.2023 - 6 மணி | ஆடுதுறை உத்திராபதி | வேலூர் பேரூர் | வேலூர் |
| 28.05.2023 - 7 மணி | ஆடுதுறை உத்திராபதி | பொத்தனூர் பேரூர் | பொத்தனூர் |
| 28.05.2023 - 8 மணி | ஆடுதுறை உத்திராபதி | மோகனூர் மேற்கு ஒன்றியம் | பாலப்பட்டி |
| 29.05.2023 -4 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | பெரியமணலி |
| 29.05.2023 – 5 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | எலச்சிபாளையம் |
| 29.05.2023 – 6 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | மாணிக்கம்பாளையம் |
| 29.05.2023 – 7 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | காந்தி ஆசிரமம், மோளிப்பள்ளி |
| 30.05.2023 – 4 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி ஒன்றியம் | நடந்தை |
| 30.05.2023 – 5 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி ஒன்றியம் | மேட்டுக்கடை |
| 30.05.2023 – 6 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி ஒன்றியம் | கூடச்சேரி |
| 30.05.2023 – 7 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி பேரூர் | பரமத்தி |
| 30.05.2023 – 8 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பாண்டமங்கலம் பேரூர் | பாண்டமங்கலம் |
| 30.05.2023 - 4 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | பேருந்து நிலையம், பால்மடை |
| 30.05.2023 – 5 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | விட்டம்பாளையம் |
| 30.05.2023 – 6 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | மொளசி ரோடு, இறையமங்கலம் |
| 30.05.2023 – 7 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | T.கைலாசம்பாளையம் |
| 30.05.2023 – 4 மணி | சேலம் சுஜாதா | பள்ளிபாளையம் நகரம் | பேருந்து நிலையம், அக்ரஹாரம் |
| 30.05.2023 – 5 மணி | சேலம் சுஜாதா | பள்ளிபாளையம் நகரம் | கண்டிபுதூர் |
| 30.05.2023 – 6 மணி | சேலம் சுஜாதா | பள்ளிபாளையம் நகரம் | ஆவாரங்காடு |
| 30.05.2023 – 7 மணி | சேலம் சுஜாதா | ஆலாம்பாளையம் பேரூர் | ஆலாம்பாளையம் |
| 31.05.2023 - 4 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | கொக்கராயன்பேட்டை |
| 31.05.2023 – 5 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | காடச்சநல்லூர் |
| 31.05.2023 – 6 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | தட்டாங்குட்டை |
| 31.05.2023 – 7 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | கல்லாங்காட்டுவலசு |
| 31.05.2023 - 4 மணி | சேலம் சுஜாதா | குமாரபாளையம் நகரம் | சின்னமநாயக்கன் பாளையம் |
| 31.05.2023 – 5 மணி | சேலம் சுஜாதா | குமாரபாளையம் நகரம் | ஆனங்கூர் பிரிவு |
| 31.05.2023 – 6 மணி | சேலம் சுஜாதா | குமாரபாளையம் நகரம் | அம்மன் நகர் |
| 31.05.2023 – 7 மணி | சேலம் சுஜாதா | படைவீடு பேரூர் | படைவீடு |

**எஸ்.எம்.மதுரா செந்தில்**

செயலாளர், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.

---

## இன்று ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் சு.முத்துசாமி வேண்டுகோள்!

*ஈரோடு, மே 28-*

*ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.குமார்முருகேஸ் தலைமையில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் முன்னிலையில் இன்று (28.5.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணிக்கு மேட்டுக்கடை தங்கம் மஹாலில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு மக்களுக்கு பயன்படுகிற வகையிலும், கழகத்தின் வளர்ச்சிக்கு முன்னெடுப்பாகவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மகத்தான மக்கள் சேவையை நினைவூட்டுகிற வகையிலும் விழாக்கள் அமைய வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நடந்த உயர்நிலை செயல்திட்டக் குழுவில் முடிவெடுத்து கழக தோழர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*முத்தமிழறிஞர் தலைவர் அவர்களின் 100வது பிறந்த நாளான ஜுன் 3ம் தேதி தொடங்கி 2024 ஜுன் 3ம் தேதி வரை ஓராண்டு காலம் தொடர்ச்சியாக நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டும்.*



*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்த நாளான ஜுன் 3ம் தேதி அன்று அனைத்து இடங்களிலும் கலைஞர் அவர்களின் படம் வைத்து மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்த வேண்டும். “ ஊர்கள் தோறும் திமுக” எனும் தலைப்பில் நமது கொடி கம்பங்கள் அனைத்தையும் புதுப்பித்து புதுக்கொடி ஏற்ற வேண்டும்.*

*“எங்கெங்கும் கலைஞர்” என்ற அடிப்படையில் கலைஞர் அவர்களின் சிலைகள் அமைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.*

*இன்றய சூழலுக்கேற்ப கணினி, இண்டர்நெட் வசதிகளுடன் கூடிய நவீனமான கலைஞர் அவர்களின் நூற்றாண்டு படிப்பகங்களை தொடங்கிட வேண்டும். அது பொதுமக்களுக்கு உதவிடும் மையங்களாக திகழ்ந்திட வேண்டும்.*

*கழக வளர்ச்சிக்காக தொடர்ந்து அரும்பாடு பட்டு வரும் 70 வயதிற்கு மேற்பட்ட கழக மூத்த முன்னோடிகளுக்கு ‘கழகமே குடும்பம்’ என்ற தலைப்பில் பொற்கிழிகள் வழங்க வேண்டும்.*

*கழக மாவட்டச் செயலாளர், அமைச்சர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கழக மூத்த முன்னோடிகளின் இல்லங்களுக்குச் சென்று அவர்களை பெருமைப்படுத்த வேண்டும்.*

*மாணவ, மாணவிகள், இளைஞர்கள், இளம்பெண்கள் கலந்து கொள்ளுகிற வகையில் நிகழ்ச்சிகளையும், போட்டிகளையும் நடத்தி பரிசுகள் வழங்க வேண்டும்.*

*கழக குடும்பங்களைச் சேர்ந்த 100 மாணவ, மாணவிகளை தேர்ந்தெடுத்து கல்வி உதவித் தொகை வழங்க வேண்டும்.*

*“என்றென்றும் கலைஞர்” என்ற தலைப்பில் கருத்தரங்கம், பொதுக்கூட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடத்தப் படவுள்ள அனைத்து இடங்களையும் பட்டியலிட்டு தலைமைக்கு உடனடியாக அனுப்ப வேண்டும். எனவே நிர்வாகிகள் பட்டியலோடு கூட்டத்திற்கு வர வேண்டும்.*

*கழகத்தில் உள்ள அனைத்து அணிகளின் சார்பில் ஓராண்டு முழுவதும் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் செயல்திட்டத்தினை உருவாக்கி இளைய தலைமுறையினர் பயன்பெறும் வகையில் நடத்திட வேண்டும்.*

*மேற்கண்ட திட்டங்களை சிறப்பாக செய்வதற்கான தங்களுடைய ஆலோசனைகளை எழுத்துப் பூர்வமாக தயார் செய்து 28.5.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு மேட்டுக்கடை தங்கம் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள செயல்வீரர்கள் கூட்டத்தில் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு. முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.*



தருமபுரி மேற்கு மாவட்டம், பொம்மிடி.துரிஞ்சிப்பட்டியில் பாப்பிரெட்டிபட்டி மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊராட்சிகளின் புதிய உறுப்பினர் சேர்க்கையை தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன் ஆய்வு செய்தார். கூட்டத்திற்கு பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ். சரவணன் முன்னிலை வகித்தார். உடன் மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் ஆ.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரமங்கலம் ஊராட்சி, மணியம்பட்டி கிராமத்தில் 2021–2022 ஆம் ஆண்டு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலைக் கடையை மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் திறந்து வைத்தார்.உடன் ஒன்றியச் செயலாளர் கணேசன்,ஒன்றிய பெருந்தலைவர் மாலா ராமச்சந்திரன்,ஒன்றிய துணை பெருந்தலைவர் ரமேஷ் பாபு,ஊராட்சி மன்ற தலைவர் மணிமொழி பரமசிவம், கவுன்சிலர் ராஜாத்தி கலைவாணன்,கழக நிர்வாகிகள்,அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.